**கவனிக்க.-** *2023.06.30 ஆந் திகதிய 2339 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வரத்தமானியின் பகுதி IV (அ) (தமிழ் மொழி மூலம்) பிரசுரிக்கப்பட வில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2340 - 2023 ජූලි මස 07 වැනි සිකුරාදා - 2023.07.07

*2340 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | 644 |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** *நீதிமன்றம், நியாய சபை அல்லது நிறுவனமொன்றை அவமதித்தல் சட்டமூலம் 2023, யூன் மாதம் 23 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது *2023*, யூலை மாதம் *28* ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் *2023*, யூலை மாதம் *14* ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

643 - B82472 - 5,403(2023/07)

# மாகாண சபை அறிவித்தல்கள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### வடமேல் மாகாண பயணிகள் போக்குவரத்து சேவை சாசனம்

வடமேல் மாகாண சபையின் 1995 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வடமேல் மாகாணத்தின் பாதை பயணிகள் போக்குவரத்து சேவை சாசனத்தின் 17 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 41 ஆம் பிரிவின் கீழ்வடமேல் மாகாணத்தின் போக்குவரத்து சேவை விடயப் பொறுப்புடைய அமைச்சருக்கு கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரத்தின்படி வடமேல் மாகாணத்தின் ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன ஆகிய என்னால் விதிக்கப்படும் கட்டளை.

லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன,
வடமேல் மாகாண ஆளுநர்.

2023, யூன் 27.
குருநாகல்.

**கட்டளை**

1. இக் கட்டளை "2023 வடமேல் மாகாண தெருக்கள் பயணிகள் போக்குவரத்து சேவைகள் திருத்தக் கட்டளை தொடர்" என்று அடையாளம் காட்டப்படுவதுடன், இக் கட்டளை மூலம் 1998 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 11 ஆந் திகதி 1045 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை, 2004 ஆம் ஆண்டு சனவரி மாதம் 16 ஆந் திகதி 1324 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை, 2005 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 22 ஆந் திகதி 1424/14 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை மற்றும் 2012 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதி 1780/05 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளைகளது திருத்தம் 1996 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 08 ஆந் திகதி 949 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை மேலும் பின்வருமாறு திருத்தம் செய்யப்படுவதுடன், இந்த கட்டளை திருத்த தொடர் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதி தொடக்கம் வடமேல் மாகாணத்திற்காக அதிகாரப்படுத்தப்படும்.

2. 2005 ஆம் ஆண்டு திசெம்பர் 22 ஆந் திகதிய 1424/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியினால் திருத்தஞ் செய்யப்பட்ட 03.02 (அ)(ii), 03.02 (அ)(iii) மற்றும் 03.02 (அ) (iv) கட்டளைகளில் குறிப்பிடப்பட்டுள்ள பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்திற்காக குறிப்பிட்ட ஆண்டு கட்டணம் பின்வருமாறு திருத்தஞ் செய்யப்படும்.

| | |
|---|---|
| 03.02 (அ) (ii) உரிமப்பத்திரத்தினை புதுப்பித்தல் சாதாரண சேவை பேரூந்திற்காக | ரூ.3750.00 |
| 03.02 (அ)(iii) வாயுபதனாக்கப்பட்ட சொகுசு பேரூந்திற்காக ஆண்டு கட்டணம் | ரூ.5000.00 |
| 03.02 (அ)(iv) வடமேல் மாகாணத்தினுள் போக்குவரத்து செய்கின்ற பேரூந்திற்கு தற்காலிக உரிமப்பத்திரக் கட்டணம் ஒரு தினத்திற்கு | ரூ.250.00 |

3. 1998 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 11 ஆந் திகதி 1045 ஆம் இலக்க வர்த்தமானியினால் திருத்தஞ் செய்யப்பட்ட 03.02 (ஆ) (i) அகற்றி அதற்காக 03.02 (ஆ) என்று புதிதாக கட்டளை ஒன்றை சேர்ப்பதனால் குறிப்பிட்ட கட்டளை பின்வருமாறு திருத்தஞ் செய்யப்படும்.

**விண்ணப்பப்பத்திரத்திற்காக கட்டணம்**

| | | |
|---|---|---|
| 03.02 (ஆ) | அவ்வாறான அனுமதிப்பத்திரம் ஒன்றினை முதன்முதலாக வழங்குதல் அல்லது புதுப்பித்தல் | ரூ.100.00 |

4. 2004 ஆம் ஆண்டு சனவரி மாதம் 16 ஆந் திகதி 1324 ஆம் இலக்க வர்த்தமானியில் 03.02 (ஈ) இல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணம் பின்வருமாறு திருத்தஞ் செய்யப்படுவதனாலும் உரிய 03.02 (ஈ) (ii) இற்கு பின்பு 03.02 (ஈ) (iii), 03.02 (ஈ) (iv) துணை கட்டளைகளை சேர்ப்பதனாலும் உரிய 03.02 (ஈ) கட்டளை பின்வருமாறு திருத்தஞ் செய்யப்படும்.

(1) 03.02(ஈ) பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தின் பிரதி ஒன்றை வழங்குவதற்காக

| | |
|---|---|
| (i) அனுமதிப்பத்திர புத்தகத்துக்காக | ரூ.5000.00 |
| (ii) அனுமதிப்பத்திர லேபலுக்காக | ரூ.1000.00 |

| | |
|---|---|
| (2) 03.02(ஈ)(iii) ஓமினி கடிதம் வழங்குவதற்காக | ரூ.1000.00 |
| 03.02(ஈ) (iv) பதவி முத்திரைக்காக | ரூ.200.00 |

5. 2004 ஆம் ஆண்டு சனவரி மாதம் 16 ஆந் திகதி 1324 ஆம் இலக்க வர்த்தமானியில் 03. 02 (உ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள " பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தின் திருத்தம் ஒன்றாக" அறவிடப்பட்ட கட்டணம் இதன் பிறகு " தெரு நீட்டிப்பு" என்று அறவிடுவதுடன், " பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தின் திருத்தம் ஒன்று" என்ற பெயரில் செய்யப்படும் சேவையை இதன் பிறகு இடைநிறுத்தப்படும். குறித்த " தெரு நீட்டிப்பு" காக பின்வருமாறு கட்டணம் விதிக்கப்படுவதனாலும் குறிக்க பிரிவினை பின்வருமாறு திருத்தஞ் செய்யப்படும்.

| | |
|---|---|
| A வகை பாதைக்காக | ரூ. 50,000.00 |
| B வகை பாதைக்காக | ரூ. 25,000.00 |
| கிராமிய பாதைகள் /அதிக கஸ்ட | ரூ. 5,000.00 |
| சிசு செரியவுக்காகவே மாத்திரம் ஒதுக்கப்பட்ட பாதைகள் | ரூ. 25,000.00 |

6. 2012 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதிய 1780/05 ஆம் இலக்க வர்த்தமானியில் 03. 02 (ஊ) வை அகற்றி அதற்காக 03. 02 (ஊ) (i) மற்றும் (ii) ஐ உட்படுத்துவதனால் குறித்த கட்டளை திருத்தஞ் செய்யப்படும்.

| | | |
|---|---|---|
| 03. 02 (ஊ) | i. மேலதிக பயணம் ஒன்றுக்காக (மாதாந்தம்) மாகாணத்தினுள் | ரூ. 2, 000.00 |
| | ii. மேலதிக பயணம் ஒன்றுக்காக (மாதாந்தம்) மாகாணங்களுக்கிடையே | ரூ. 2, 000.00 |

7. மேலே குறிப்பிட்ட (6) கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள 03. 02 (ஊ) துணைக் கட்டளைக்கு பின்பு 03. 02 (எ), 03.02 (ஏ) ஆக புதிதாக துணைக் கட்டளைகளை உட்படுத்துவதனால் குறித்த 03. 02 பிரிவு பின்வருமாறு திருத்தஞ் செய்யப்படும்.

| | | | |
|---|---|---|---|
| 03. 02. | (எ) | விசேட சுற்றுலா கட்டணம்<br>(அதிகரிக்கின்ற எல்லா தினத்திற்கும் ரூ. 100. 00 படி அறவிடப்படும்) | ரூ. 500. 00 |
| | (ஏ) | பாதை ஒன்றில் குறித்த சேவையில் பயணிக்கின்ற பயணிகள் அனுமதிப்பத்திரம் ஒன்றின் அப் பாதையிலேயே பயணத்தின் ஆரம்பம் மற்றும் பயண முடிவினை திருத்தஞ் செய்யப்படும் போது ரூ. 50000. 00 கட்டணம் அறவிடப்படும். | |

8. 2004 ஆம் ஆண்டு சனவரி மாதம் 16 ஆந் திகதிய 1324 ஆம் இலக்க வர்த்தமானியில் 5.11 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ரூ. 450.00 என்ற கட்டணம் ரூ. 1500.00 என்று திருத்தஞ் செய்வதனால் மற்றும் குறிப்பிட்ட கட்டளைக்கு பின்வரும் துணை கட்டளையை சேர்ப்பதனால் குறித்த கட்டளை பின்வருமாறு திருத்தஞ் செய்யப்படும்.

| | | |
|---|---|---|
| 5.11 | (i) சாரதி பயிற்சிக்கான கட்டணம் | ரூ. 800.00 |
| | (ii) சாரதி திறனுக்கான கட்ணம் | ரூ. 500.00 |

9. 2004 ஆம் ஆண்டு சனவரி மாதம் 16 ஆந் திகதிய 1324 ஆம் இலக்க வர்த்தமானியில் 07. 02 (ஏ) இல் குறிப்பிடப்பட்டவாறு " 07. 02 (ஏ) துணை கட்டளையில் இறுதி வரியில் குறிப்பிடப்பட்டுள்ள ரூ. 500.00 இற்காக ரூ. 1500.00 என்று" திருத்தஞ் செய்வதனால் மற்றும் குறித்த 07. 02 (ஏ) துணை கட்டளைக்கு பின் 07. 02 (ஐ) ஆக புதிதாக துணை கட்டளை ஒன்றை உட்படுத்துவதனாலும் குறித்த கட்டளை பின்வருமாறு திருத்தஞ் செய்யப்படும்.

| | |
|---|---|
| 07. 02 (ஐ) நடத்துனரை பயிற்றுவிப்பதற்கான கட்டணம் | ரூ. 800. 00 |

10. 2012 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதிய 1780/05 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் 11.03 இல் குறிப்பிடப்பட்டுள்ள " மாதாந்த சேவைக் கட்டணம்" என்பதை " மாதாந்த பிரயாண குறிப்பு பத்திர சேவைக் கட்டணம்" என்று திருத்தஞ் செய்வதனாலும் குறித்த மாதாந்த பிரயாண குறிப்பு பத்திர சேவைக் கட்டணம் பின்வருமாறு திருத்தஞ் செய்யப்படுவதனாலும் குறித்த 11. 03 கட்டளை பின்வருமாறு திருத்தஞ் செய்யப்படும்.

| | | |
|---|---|---|
| 11. 03 | மாதாந்த பிரயாண குறிப்பு பத்திர சேவைக் கட்டணம் ஒவ்வொரு பேரூந்திற்காக | ரூ. 1500.00 |

11. 2004 ஆம் ஆண்டு சனவரி மாதம் 16 ஆந் திகதி 1324 ஆம் இலக்க வர்த்மானியினால் திருத்திய 11. 04 உம், 2012 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதி 1780/ 05 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியினால் திருத்திய 11. 04 (ஐ) ம் அகற்றி அதற்காக 11. 04 (அ) தொடக்கம் 11. 04 (ள) வரை துணை கட்டளைகளை சேர்ப்பதனால் குறித்த 11. 04 கட்டளை பின்வருமாறு திருத்தஞ் செய்யப்படும்.

| | | |
|---|---|---|
| 11. 04 அ | பாதைகள் பயணிகள் போக்குவரத்து செய்வதற்காக அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாது பயணிகள் போக்குவரத்து செய்தல் | 5000. 00 |
| ஆ | பயணிகள் போக்குவரத்து அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குறித்த பாதையில் போக்குவரத்து செய்யாமை | 1000.00 |
| இ | பேரூந்துகள் தங்கள் இலக்கை நோக்கிச் செல்லாமல் இடையில் திருப்புதல் அல்லது இடையில் பயணத்தை ஆரம்பித்தல் | 2000.00 |
| ஈ | குறித்த நேரசூசிக்கு அமைய போக்குவரத்து செய்யாமை | 1000.00 |
| உ | போக்குவரத்து பயணிகள் லேபல் /மாதாந்த போக்குவரத்து சேவை நுழைவு பத்திரம் முன்பக்க கண்ணாடியில் காட்சிப்படுத்தாத சந்தர்ப்பத்தில் | 1000.00 |
| ஊ | பயணிகளிடம் அறவிடப்படுகின்ற கட்டணத்திற்காக பயணிகள் சீட்டு வழங்காத சந்தர்ப்பத்தில் | 1000.00 |
| எ | அறவிடப்படுகின்ற கட்டணம் தொடர்பாக பேரூந்தினுள் காட்சிப்படுத்தாத சந்தர்ப்பத்தில் | 1000.00 |
| ஏ | பாதை இலக்கம் / பயண ஆரம்பம் / பயண முடிவு பேரூந்தின் முன் பக்கத்தில் மற்றும் பின் பக்கத்தில் பொதுமக்களுக்கு தெரியும் வகையில் காட்சிப்படுத்தல் | 1000.00 |
| ஐ | வடமேல் பாதை பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் பதவி முத்திரையினை காட்சிப்படுத்தாத சந்தர்ப்பத்தில் | 1000.00 |
| ஒ | பேரூந்தில் அனுமதிக்கப்பட்ட பயணிகளின் எண்ணிக்கையினை காட்சிப்படுத்தாத சந்தர்ப்பத்தில் | 1000.00 |
| ஓ | பேரூந்தில் அனுமதிக்கப்பட்ட பயணிகளின் எண்ணிக்கையிலும் பார்க்க அதிகளவில் பயணிகளை ஏற்றிச் செல்லுதல் | 1000.00 |
| க | நடத்துனர் உரிமப்பத்திரம் இல்லாத ஒருவரை பணியில் ஈடுபடுத்தல் | 1000.00 |
| ங | அதிகாரச் சபையில் பதிவு செய்யப்படாத சாரதி ஒருவரை பணியில் ஈடுபடுத்தல் | 1000.00 |
| ச | மாதாந்த போக்குவரத்து பதிவுப் பத்திரம் /நுழைவுப் பத்திரம் இல்லாத பேரூந்து போக்குவரத்து செய்தல் | 1000.00 |
| ஞ | 1995 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கத்திற்கான வடமேல் மாகாண பாதைகள் பயணிகள் போக்குவரத்து சேவை சாசனத்தில் 11 ஆம் பகுதியில் 20 ஆம் பிரிவில் 03 ஆம் உப பிரிவில் குறிப்பிடவாறு பேரூந்தாக வரையறுக்கப்பட்டுள்ள வாகனம் தவிர ஏனைய வாகனம் ஒன்றினை பயணிகள் போக்குவரத்திற்கு பயன்படுத்தல் | 1000.00 |
| ட | சட்டரீதியான அனுமதிப்பத்திர காலம் முடிவடைந்திருக்கையில் பணியில் ஈடுபடுதல் / மற்றும் ஈடுபடுத்தல் | 1000.00 |
| ண | அதிகார சபையின் அனுமதியின்றி விசேட வாடகை போக்குவரத்து அல்லது நலன்புரிச் சுற்றுலாவில் ஈடுபடல் | 1000.00 |
| த | பாதைகள் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையில் அனுமதிப்பத்திரம் இன்றி கைத்தொழில் பேட்டை உட்பட விசேட பயணிகள் போக்குவரத்து பணியில் ஈடுபடல் | 1000.00 |
| ந | தூர போக்குவரத்து சேவை பேரூந்து அனுமதிக்கப்பட்ட இடங்களில் தவிர ஏனைய இடங்களில் பயணிகளை ஏற்றுதல் மற்றும் இறக்கிவிடல் | 1000.00 |

| | | |
|---|---|---|
| ப | பாதகள் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையில் பதிவு செய்யப்படாமல் பாடசாலை சேவைகளில் ஈடுபடல் | 1000.00 |
| ம | பேரூந்தில் அனுமதிக்கப்பட்ட இருக்கை எண்ணிக்கைக்கு பார்க்கிலும் அதிகளவில் /குறைவாக இருத்தல் | 1000.00 |
| ய | சீருடை இருக்காமை | 1000.00 |
| ர | கண்டறியப்பட்ட பிற பிழைகள் | 1000.00 |
| ல | நிறுத்தாமல் வாகனம் செலுத்துதல் | 1000.00 |
| வ | பேரூந்தில் தெரு உரிமப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்துதல் | 1000.00 |
| ழ | நடத்துனர் உரிமப்பத்திரத்தின் காலம் முடிவடைந்திருக்கையில் பணியில் ஈடுபடல் மற்றும் ஈடுபடுத்தல் | 1000.00 |
| ள | சாரதி உரிமப்பத்திரத்தின் காலம் முடிவடைந்திருக்கையில் பணியில் ஈடுபடல் மற்றும் ஈடுபடுத்தல் | 1000.00 |

12. 2012 ஆம் ஆண்டின் ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதிய 1780/05 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியினால் திருத்திய 11.05 பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள "சேவைக் கட்டணம்" என்பதை "மாதாந்த நுழைவுச் சீட்டு சேவைக் கட்டணம்" என்று திருத்தியமைப்பதனால் குறித்த 11.05 பிரிவு பின்வருமாறு திருத்தியமைக்கப்படும்.

(3) 11.05 மாதாந்த நுழைவுச் சீட்டு சேவைக் கட்டணம் ரூ. 1500.00 உம் வடமேல் மாகாண அதிகார எல்லைக்கு உரிய கிலோமீட்டருக்கு குறைந்த அளவில் பயணிக்கின்ற பேரூந்துக்காக நுழைவுச் சீட்டுக் கட்டணம் ரூ. 800.00 ஆக அறவிடப்படும்.

13. 2012 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதிய 1780/05 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியினால் திருத்திய கட்டணமும், குறித்த 16(அ) இல் தொடர் இலக்கம் 8 இற்கு பின் 9 தொடக்கம் 12 வரையிலான தொடர் இலக்கத்தை சேர்ப்பதனாலும் குறித்த துணை கட்டளை பின்வருமாறு திருத்தஞ் செய்யப்படும்.

(1) 16(அ)

| | தொடர் இலக்கம் | வாகன வகுப்பு | திருத்தஞ் செய்யப்படும் புதிய கட்டணம் ரூ.ச. |
|---|---|---|---|
| | 1. | மோட்டார் வண்டி A | 3000.00 |
| | 2. | முச்சக்கர வண்டி BI | 4500.00 |
| | 3. | இலகுரக வாகனம் B | 11200.00 |
| | 4. | பயிற்சியற்ற இலகுரக வாகனம் B | 5500.00 |
| | 5. | கனரக வாகனம் D | 15000.00 |
| | 6. | பயிற்சியற்ற கனரக வாகனம் D | 7500.00 |
| | 7. | முன் பயிற்சி பரிசீலனை | 1000.00 |
| | 8. | திருத்தல் பயிற்சி (மணித்தியாலத்திற்கு) | 2000.00 |
| (1)16(அ) | 9. | துவிச்சக்கர வண்டி/முச்சக்கர வண்டி ABI | 6000.00 |
| | 10. | துவிச்சக்கர வண்டி/முச்சக்கர வண்டி/இலகுரக வாகனம் ABI B | 15200.00 |
| | 11. | முச்சக்கர வண்டி/ இலகுரக வாகனம் BI | 13900.00 |
| | 12. | துவிச்சக்கர வண்டி/ இலகுரக வாகனம் AB | 13200.00 |

16 (எ) உரிமப்பத்திரம் வழங்கும் போது டென்டர் ஏற்பாட்டிற்கு அமைய விதிக்கப்படுகின்ற ஆக்ககூடிய கேள்வித் தொகை பின்வருமாறு திருத்தஞ் செய்யப்படுவதுடன் அதற்காக பாதைகளை வகைப்படுத்தி கீழுள்ளவாறு கட்டணம் அறவிடப்படும்.

A பாதை ஒன்றிற்காக - ரூ. 1,000,000.00
B பாதை ஒன்றிற்காக - ரூ. 750,000.00
C பாதை ஒன்றிற்காக - ரூ. 500,000.00
D பாதை ஒன்றிற்காக - ரூ. 250,000.00

16 (ஏ) புதிய உரிமப்பத்திரம் டென்டர் கோரும் போது டென்டர் நிபந்தனைகளை பாதுகாப்பதற்காக ரூ. 100,000.00 தொகை மீள் செலுத்தும் பிணை வைப்புத் தொகை அறவிடப்படும். ஏதாவதொரு காரணத்திற்காக ஒரு பெறுநர் எப்படியாவது உரிமப்பத்திரம் பெற்றுக் கொள்ளாது அந்த பிணை வைப்புத் தொகை மீள் செலுத்தாது இரத்துச் செய்து வருமான கணக்கிற்கு பொறுப்படைக்கப்படும்.

16 (ஒ) மாதாந்த போக்குவரத்து குறிப்பு பத்திரம் மற்றும் நுழைவுப் பத்திரத்திற்கு மேலதிகமாக போக்குவரத்து பயணத்திற்காக காலதாமதக் கட்டணமாக அறவிடப்பட்ட 10% மேலதிக கட்டணம். எல்லா மாதமும் 1 ஆந் திகதி தொடக்கம் 10 வரை 25% வரையும் 10 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரை 50% மேலதிக கட்டணத்திற்கு உட்பட்டு சேவைக் கட்டணம் அறவிடப்படும்.

14. 2005 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 22 ஆந் திகதி 1424/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் திருத்தம் 16(ஏ) இல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணத்தை திருத்தஞ் செய்வதனால் குறித்த துணை கட்டளை பின்வருமாறு திருத்தஞ் செய்யப்படும்.

16(ஏ)

(i) உரிமையினை முறைப்படுத்தும் போது பாதை வகைப்படுத்தலுக்கு அமைய கீழுள்ளவாறு கட்டணம் அறவிடப்படுவதுடன் பேரூந்திற்கு மாத்திரம் வேறுபடுகின்ற சந்தர்ப்பங்களில் உரிமப்பத்திரக் கட்டணம் மாத்திரமும்

| | |
|---|---|
| A பாதை ஒன்றிற்காக | - ரூ. 500,000.00 |
| B பாதை ஒன்றிற்காக | - ரூ. 300,000.00 |
| C பாதை ஒன்றிற்காக | - ரூ. 200,000.00 |
| D பாதை ஒன்றிற்காக | - ரூ. 100,000.00 |

(ii) ஒரே குடும்பத்தில் தாய்/தந்தை, சகோதர/சகோதரிகளுக்கிடையே உரிமப்பத்திர உரிமையினை முறைப்படுத்தும் போது உரிமப்பத்திரக் கட்டணங்களுக்கு மேலதிகமா ரூ. 25,000.00 தொகை அறவிடப்படும். துணைவர் இறந்த சந்தர்ப்பத்தில் 06 மாதத்தினுள் உரிமையினை முறைப்படுத்தும் போது உரிமப்பத்திரக் கட்டணத்திற்கு மேலதிகமாக ரூ. 5000.00 தொகை சேவைக் கட்டணம் அறவிடப்பட வேண்டியதுடன் 06 மாதத்திற்கு மேற்பட்ட போது உறவுமுறைக்கு அறவிடப்படும் கட்டணம் அறவிடப்படும்.

15. மேலே 14 இல் குறிப்பிடப்பட்டுள்ள 16(ஏ) துணை கட்டளையின் பின் 16 (ஒ), 16 (ஓ) ஆக புதிதாக துணைக் கட்டளைகளை ஒன்று சேர்ப்பதனாலும் குறித்த 16 கட்டளை பின்வருமாறு திருத்தஞ் செய்யப்படும்.

16 (ஒ) (i) சிசு செரிய புதிய பாதை வழங்கும் போது/உரிமையை முறைப்படுத்தும் போது உரிமப்பத்திரக் கட்டணத்திற்கு மேலதிகமாக பின்வருமாறு கட்டணம் அறவிடப்படும்.

| | |
|---|---|
| A பாதை | - ரூ. 200,000.00 |
| B பாதை | - ரூ. 150,000.00 |
| கிராமிய பாதை/அதிக கஸ்ட | - ரூ. 100,000.00 |

மாகாணங்களுக்கிடையிலான சிசு செரிய பாதை உரிமப்பத்திரத்திற்காக பரிந்துரை வழங்கும் போது மேலே குறிப்பிடப்பட்ட பாதைகளை வகைப்படுத்துவதன் மூலம் குறித்த கட்டணம் அறவிடப்படும்.

(ii) சிசுசெரிய பாதை ஆராய்ச்சி கட்டணமக 25 கிலோ மீட்டருக்கு குறைந்த பாதைக்காக ரூ. 5000.00 தொகையும், 25 கிலோ மீற்றருக்கு மேற்படுகின்ற பாதைக்காக முதலாவர் 25 கிலோ மீற்றருக்காக ரூ. 5000.00 உம், அதிகரிக்கின்ற அனைத்து கிலோ மீற்றருக்கும் ரூ. 250.00 படி அறவிடப்படும்.

(iii) கெமிசெரிய புதிய உரிமப்பத்திரத்திற்காக உரிமப்பத்திரக் கட்டணத்திற்கு மேலதிகமாக ரூ.100,000.00 சேவைக் கட்டணமாக அறவிடப்படும்.

(iv) சிசுசெரிய மற்றும் கெமிசெரிய மாதாந்த சேவைக் கட்டணம் ஒரு பேருந்திற்காக ரூ.1000.00 அறவிடப்படும்.

(v) சீசுசெரிய மற்றும் கெமிசெரிய மாதாந்த போக்குவரத்து குறிப்பு பத்திரத்துக்காக காலதாமதக் கட்டணமாக மேலதிக கட்டணம் எல்லா மாதத்திலும் 1 ஆந் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரை 25% வரையிலும் 10 ஆம் திகதி தொடக்கம் 30 ஆந் திகதி வரை 50% மேலதிக கட்டணத்திற்கு உட்பட்டு சேவைக் கட்டணம் அறவிடப்படும்.

(5) 16(ஒ) மிகவும் கஷ்டப் பாதையில் பொது பயணிகள் போக்குவரத்து நடவடிக்கையினை முறைப்படுத்தும் நோக்காக கொண்டு பேரூந்து, லொரி, பல் செயற்பாடு ஆகிய வாகனத்திற்காக பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் வழங்கும் போது பின்வருமாறு கட்டணம் அறவிடப்படும். மேலே கூறப்பட்ட லொரி, பல் செயற்பாடுகளுக்காக பேரூந்து ஒன்றை மாதிரிப்படுத்துவதாயின் அந்த பேருந்திற்காக பாதை உரிமப்பத்திரம் வழங்கும் போது கெமி செரிய சேவையின் கீழ் வழங்கப்படுகின்ற உரிமப்பத்திரக் கட்டணமான ரூ.100,000.00 தொகையை அறவிடப்படும்.

| | | |
|---|---|---|
| (i) | மிகவும் கஷ்டமான பாதைகளில் புதிய உரிமப்பத்திரம் வழங்குதல்/உரிமையை முறைப்படுத்தல் | ரூ.30,000,00 |
| (ii) | உறவு முறையை அடிப்படையாக கொண்டு உரிமையை முறைப்படுத்தல் | ரூ.10,000.00 |
| (iii) | கஷ்டமான பாதை சேவைக்காக பாதை உரிமப்பத்திரம் வழங்குதல் | ரூ.1,875.00 |
| (iv) | மாதாந்த போக்குவரத்து குறிப்பு சேவை கட்டணம் | ரூ.600.00 |
| (v) | மிகவும் கஷ்ட பாதை சேவைக்காக மாதாந்த போக்குவரத்து குறிப்பு பத்திர காலதாமதக் கட்டணம் (ஒரு மாதத்திற்கு) | ரூ.100.00 |
| (vi) | பதவி முத்திரை | ரூ.200.00 |

16. 2012 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதி 1780/05 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியினால் பிரசுரிக்கப்பட்ட 03 ஆம் பிரிவு பின்வருமாறு திருத்தஞ் செய்யப்படும்.

03 ஆம் பிரிவில் சாரதி மற்றும் நடத்துனர்களினால் பயன்படுத்தப்பட வேண்டிய சீருடை இங்கு கீழே முதலாம் அட்டவணையில் விரிவாக காட்டப்பட்டுள்ள சீருடையாக இருக்க வேண்டியதுடன், உரிய சீருடையில் அதிகார சபையினால் விதிக்கப்படுகின்ற பதவி முத்திரையினை எல்லா சந்தர்ப்பங்களிலும் அணிதல் வேண்டும்.

17. 2012 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதிய 1780/05 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியினால் பிரசுரிக்கப்பட்ட 12 ஆம் பிரிவு பின்வருமாறு திருத்தஞ் செய்யப்படும்.

சீருடை தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள கட்டளைகள் சேவை புரிகின்ற சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் இக் கட்டளைகளை மீறுகின்ற எல்லா சந்தர்ப்பங்களிலும் ரூ.1000.00 தொகையினை சேவைக் கட்டணமாக செலுத்துவதற்கு உட்படுதல் வேண்டும்.

18. இங்கு திருத்தக் கட்டளைத் தொடரில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளின் வசனங்களிடையே ஏதாவதொரு முரண்பாடுகள் ஏற்படுமாயின் சிங்கள மொழியின் வசனங்கள் அதிகாரப்படுத்தப்படும்.

**முதலாவது அட்டவணை**

சீருடை - கைகட்டை சாதாரண ரீசர்ட் ஆகும். சீருடை முழுவதுமாக ஆரஞ்சு மற்றும் மஞ்சள் நிறத்தில் அதிகார சபையின் அதிகார பூர்வ முத்திரையினை கொண்டதாக இருக்க வேண்டும்.



# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

*அட்டவணை - 2023*

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **யூலை** | .. | வெள்ளி | 07.07.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.06.2023 |
| | | வெள்ளி | 14.07.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.06.2023 |
| | | வெள்ளி | 21.07.2023 | .. | நண்பகல் 12 | வியாழன் | 07.07.2023 |
| | | வெள்ளி | 28.07.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.07.2023 |
| **ஓகத்து** | .. | வெள்ளி | 04.08.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.07.2023 |
| | | வெள்ளி | 11.08.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.07.2023 |
| | | வெள்ளி | 18.08.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.08.2023 |
| | | வெள்ளி | 25.08.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.08.2023 |
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 01.09.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.08.2023 |
| | | வெள்ளி | 08.09.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.08.2023 |
| | | வெள்ளி | 15.09.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.09.2023 |
| | | வெள்ளி | 22.09.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.09.2023 |
| | | புதன் | 27.09.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.09.2023 |

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2023 ஆம் ஆண்டு சனவரி 02 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.